# மன்றாட்டுக்கள்

நமது வழியும் உண்மையும் உயிருமான ஆண்டவரிடம் வேண்டுவோம்.

**பதில்: வாரும் ஆண்டவரே, வந்து எம்மோடு தங்கியருளும்.**

மிக உன்னதரின் மகனே, உமது வருகையை கபிரியேல் தூதர் தூய மரியாவுக்கு அறிவித்தார் - வந்து மக்களிடையே உம் ஆட்சியை நிறுவியருளும்.

திருமுழுக்கு யோவான் உமது நாளைக் கண்டு மகிழ்ந்தார் - உமது மீட்பை எமக்கு அளிக்க வந்தருளும்.

சிமியோன் உலகின் ஒளியான உம்மை ஏற்றுக் கொண்டார் - உலகில் நன்மனத்தோர் அனைவருக்கும் உமது ஒளியைத் தந்தருளும்.

இரவின் காவலர் உதயத்தை எதிர்நோக்குவதுபோல் ஆர்வமுடன் நாங்கள் உம்மை எதிர்நோக்குகின்றோம் – இளஞாயிறுபோல் வரும் நீர், இறப்பின் நிழலில் இருப்போர்க்குப் புது வாழ்வு தந்தருளும்.

# இறுதி செபம்

அனைத்தையும் படைத்தாளும் கடவுளே, எங்கள் ஆண்டவரின் பிறப்பு விழாவை, மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறோம் என்பதை நீர் நன்கு அறிவீர். ஆழ்ந்த மகிழ்ச்சியை நாங்கள் உய்த்துணரவும், அதே மகிழ்ச்சியோடு மாண்புமிக்க அவருடைய வருகையைச் சிறப்புடன் கொண்டாடவும் எங்களுக்குத் துணைபுரிவீராக.

உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர்வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்திநின்றும் பாதுகாத்து, நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

ஆமென்



## ஆண்டவரின் செபம்

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# திருவழிபாட்டின் திருமணிகள்

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...

## அன்பும் நட்பும் எங்குள்ளதோ



**அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார் 2**

**1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய் கூட்டி சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
ஜீவிய தேவனுக்கு அஞ்சிடுவோம்
அவருக்கு அன்பு செய்திடுவோம்
நெரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரையொருவர் நேசிப்போம்**

**2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்துகொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக**

**முன்மொழி** 1: இதோ ஆண்டவர் வருவார் . அரசர்களோடு அமர்வார். மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார்.

# சங் 110

ஆண்டவர் என் தலைவரிடம்
நான் உம் பகைவரை உமக்குக் கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும் என்று உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்:
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்:
வைகறை கருவுயிர்த்த பனிபோல்
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்:
அவர் தம் மனத்தை மாற்றிக்கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்:
தம் சினத்தின் நாளில் அவர்
மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் பருகுவார்:
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்

## பிதாவுக்கும்...

**முன்மொழி:** இதோ ஆண்டவர் வருவார் . அரசர்களோடு அமர்வார். மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார்.

**முன்மொழி** 2: மலைகள் மகிழ்ச்சியையும் குன்றுகள் நீதியையும் பிறப்பிக்கட்டும். ஏனெனில் உலகின் ஒளியாம் ஆண்டவர் வல்லமையுடன் வருகிறார்.

# சங் 111

நெஞ்சார ஆண்டவர்க்கு நன்றி செலுத்துவேன்,
நீதிமான்களின் மன்றத்திலும் சபையிலும்
அவருக்கு நன்றி செலுத்துவேன்.
ஆண்டவரின் செயல்கள் உயர்ந்தவை, அவற்றில் இன்பம்
காண்போர் அனைவரும் அவற்றை உயர்துணவர்.

அவரது செயல் மேன்மையும் மாண்பும் மிக்கது,
அவரது நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
அவர் தம் வியத்தகு செயல்களை
என்றும் நினைவில் நிலைக்கச் செய்துள்ளார்,
அருளும் இரக்கமும் உடையவர் ஆண்டவர்.

தமக்கு அஞ்சி நடப்போர்க்கு அவர் உணவு அளிக்கின்றார்,
தமது உடன்படிக்கையை என்றும் நினைவில் கொள்கின்றார்,
வேற்றினத்தாரின் உரிமைச் சொத்தைத்
தம் மக்களுக்கு அளித்து, ஆற்றல்மிக்க தம் செயல்களை
அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

அவர்தம் வலிமைமிகு செயல்கள்
நம்பிக்கைக்குரியவை, நீதியானவை
அவர்தம் கட்டளைகள் அனைத்தும் நிலையானவை.
என்றென்றும் எக்காலமும் அவை நிலைமாறாதவை,
உண்மையிலும் நேர்மையிலும் அவை உருவானவை.

தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்,
தம் உடன்படிக்கை என்றென்றும் நிலைக்குமாறு செய்தார்,
அவரது திருப்பெயர் தூயது, அஞ்சுதற்கு உரியது.

ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்,
அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர்
நல்லறிவுடையோர்,
அவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

## பிதாவுக்கும்...

**முன்மொழி:** மலைகள் மகிழ்ச்சியையும் குன்றுகள் நீதியையும் பிறப்பிக்கட்டும். ஏனெனில் உலகின் ஒளியாம் ஆண்டவர் வல்லமையுடன் வருகிறார்.

**முன்மொழி** 3:நம்பிக்கையோடு ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம் நீதியோடும் நேர்மையோடும் வாழ்வோமாக.

# திருவெளி

19: 1 ஆ 2, 5-7

எல் : அல்லேலூயா!
முதல் : மீட்பும்மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா).

முதல் : ஏனெனில் அவருடைய தீர்ப்புகள் உண்மை உள்ளவை, நீதியானவை.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

முதல் : கடவுளின் பணியாளர்களே, நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா)

முதல் : அவருக்கு அஞ்சிநடப்பவர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

முதல் : உன் கடவுளாகிய ஆண்டவர், எல்லாம் வல்லவர், அவர் ஆட்சி செலுத்துகின்றார்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா)

முதல் : எனவே மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப் போற்றிப் புகழ்வோம்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

முதல் : ஏனெனில் ஆட்டுக் குட்டியின் திருமண விழா வந்துவிட்டது.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா).

முதல் : மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறாள்
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

## பிதாவுக்கும்...

**முன்மொழி : நம்பிக்கையோடு ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம் நீதியோடும் நேர்மையோடும் வாழ்வோமாக.**

# அருள்வாக்கு பிலி 4 : 4-5

ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள், மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார்.

# சிறு மறுமொழி

**முதல்: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.**
பதில்: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.
**முதல்: உமது மீட்பையும் தந்தருளும்.**
பதில்: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.
**முதல்: பிதாவுக்கும்...**
பதில்: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.

# கன்னிமரியின் பாடல்



முன்மொழி: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.
முன்மொழி : மிக உன்னதரின் வாயினின்று புழப்பட்டு வருகின்ற ஞானமே, நீ ஒரு முனைமுதல் மறு முனைவரை ஆற்றலுடன் அனைத்தையும் இனிதாய் ஒழுங்குப் படுத்துகிறாய். உண்மையின் வழியை எங்களுக்குக் கற்பிக்க வருவாயாக.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

## பிதாவுக்கும்...

முன்மொழி: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும். முன்மொழி : மிக உன்னதரின் வாயினின்று புழப்பட்டு வருகின்ற ஞானமே, நீ ஒரு முனைமுதல் மறு முனைவரை ஆற்றலுடன் அனைத்தையும் இனிதாய் ஒழுங்குப் படுத்துகிறாய். உண்மையின் வழியை எங்களுக்குக் கற்பிக்க வருவாயாக.